| H.M.O.P.No.112/2023 | PW1: திருமதி. சித்ரா<br>க/பெ. திரு. அருள்தரும்ஜோதி | 25-02-2025 |
| --- | --- | --- |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. எனது மனுவில் எதிர்மனுதாரரும் அவரது தந்தையும் என்னை எனது சகோதரர் மற்றும் தந்தையுடன் வைத்து தவறாக பேசியதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2022 டிசம்பர் மாதம் தனிக்குடித்தனம் வைத்தார்கள் என்றால் சரிதான். தனிக்குடித்தனம் இருந்தபோது வீட்டிற்கு தேவையான அனைத்து பொருட்களையும் எதிர்மனுதாரர்தான் வாங்கிக்கொடுத்தார் என்றால் சரியல்ல, எனது பெற்றோர்கள்தான் வாங்கிக்கொடுத்தார்கள்.

2. எதிர்மனுதாரர் மனநோயாளி என்பதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. எதிர்மனுதாரரின் உறவினர்களுடன் பேசினால்கூட அவர்களுடன் சேர்த்து வைத்து என்னை எதிர்மனுதாரர் தவறாக பேசினார் என்று பொய்யான என் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 6 வருடம் எதிர்மனுதாரருடன் வாழ்ந்த நிலையில் அவர் மனநலம் பாதிக்கப்பட்டார் என்பதற்கு மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்துள்ளாரா என்றால் இல்லை.

3. திருமணத்திற்கு முன்பு எனக்கு ஜெயக்குமார் என்பவருடன் பழக்கம் இருந்தது என்றாலும், திருமணத்திற்கு பிறகு அவருடன் நான் 4 வருடங்களாக பேசி வந்ததால்தான் எனக்கும் எதிர்மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு நான் ஜெயக்குமார் என்பவருடன் பேசிக்கொண்டிருந்தபோது எதிர்மனுதாரரின் தாயார் பார்த்துவிட்டு என்னை எச்சரித்தார் என்றாலும், அதற்கு பின்னிட்டும் நான் ஜெயக்குமாருடன் தொடர்ந்து பேசி வந்தேன் என்றாலும்

சரியல்ல, திருமணம் ஆகி 2 ஆண்டுகள் வரையில் என்னிடம் செல்போன் இல்லை.

4. திருப்பத்தூரை சேர்ந்து ரமேஷ் என்பவருடன் நான் தொடர்ந்து தவறாக பேசிவந்தேன் என்றாலும், அதற்காக வீடியோ புட்டேஜ் இருக்கிறது என்றாலும் சரியல்ல. நான் ரமேஷ் என்பவருடன் தவறான உறவு வைத்துக்கொண்டு அவருடன் வீட்டை விட்டு சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் இது சம்மந்தமாக எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததால், அதை தெரிந்துகொண்டு ரமேஷ் என்னை வேலூர் பஸ் ஸ்டேண்டில் விட்டுவிட்டு சென்றார் என்றால் சரியல்ல.

5. எதிர்மனுதாரரின் குடும்பத்தினரோ யாரும் என்னை அடித்து கொடுமைப்படுத்தவில்லை என்றாலும், நானேதான் எனது வாழ்க்கையையும், எதிர்மனுதாரர் வாழ்க்கையையும் சீரழித்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரரின் உறவினரான ஜெயந்தி என்பவர் ரமேஷ் என்பவருக்கு போன் பண்ணி கேட்டபோது அதற்கு ரமேஷ் அவர் போன் செய்யவில்லை என்றும், நான்தான் அவருக்கு அடிக்கடி போன் செய்வதாக சொன்னார் என்று சொன்னால் சரியல்ல.

6. நான் அஜித் என்பவருடன் தவறான முறையில் உறவு வைத்துக்கொண்டதால் அதை தெரிந்து அவரது மனைவி என் வீட்டில் வந்த சண்டை போட்டார் என்றாலும், அந்த விஷயம் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல, எனக்கு அஜித் என்பவரை யார் என்றே தெரியாது. எனக்கு அஜித் மற்றும் ரமேஷ் ஆகிய இருவருடன் தகாத உறவு இருந்தது என்றாலும், அதனை என் மாமியார் கண்டுபிடித்துவிட்டதால் நான் வீட்டை விட்டு வெளியே வந்துவிட்டேன்

என்றாலும் சரியல்ல. நான் செய்த தவறை மறைத்து தவறான சங்கதிகளைக்கொண்டு இம்மனுவினை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நீதிமன்றத்தை நான் சுத்தமான காரணங்களுடன் அனுகவில்லை என்றாலும், அதனால் என்னுடைய மனு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**